# செந்தமிழ்

தொகுதி : 94 சனவரி 2000 பகுதி : 1

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் *மா. தனுக்கோடி பாண்டியன்* பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஆசிரியர் பேரறிஞர் *நா. பாலுசாமி*
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

## தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு. நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம். பி. ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. மா. தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே. எஸ். டி. இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என். சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஜயா | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா. அழகுமலை | உறுப்பினர் |
| திரு. க. சி. அகமுடைய நம்பி | உறுப்பினர் |
| திரு. எஸ். பரங்குன்றம் | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பேரறிஞர். | நா. பாலுசாமி (ஆசிரியர்) |
| பேரறிஞர். | தமிழண்ணல் |
| பேரறிஞர். | செ. கந்தசாமி |
| டாக்டர். | என். சேதுராமன் |
| பேரறிஞர். | ம. ரா. போ. குருசாமி |
| பேரறிஞர். | சி. கதிர் மகாதேவன் |
| பேரறிஞர். | கு. துரைராசு |
| பேரறிஞர். | அ. அ. மணவாளன் |
| பெரும்புலவர். | இரா. இளங்குமரன் |
| பேரறிஞர். | அ. தட்சிணாமூர்த்தி |
| பேரறிஞர். | எஸ். எம். கமால் |
| பேரறிஞர். | ஈ. கி. இராமசாமி |
| பேராசிரியர். | சே. அரிராமநாதன் |
| பேரறிஞர். | அ. மா. பரிமணம் |

# செந்தமிழ்

## திங்கள் இதழ்


| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

மதிப்புறு ஆசிரியர் *மா. தனுக்கோடி பாண்டியன்* பி.ஏ., பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஆசிரியர் பேரறிஞர் *நா. பாலுசாமி*

எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

## பொருளடக்கம்


1. புத்தாயிரத்தில் புத்தொளி ... 1

*-ஆசிரியர் பேசுகிறார்*

2. சொல்வலை ... 4

*- பேரறிஞர் அ.மா. பரிமணம்*

3. எல்லோருக்கும் தொல்காப்பியம் ... 10


*- பேரறிஞர் நா. பாலுசாமி*

4. இலக்கணக் கொள்கைகளும் தெ.பொ.மீயின் பார்வையும் ... 20

*- பேரறிஞர் செ. வை. சண்முகம்*

**ஆசிரியர் பேசுகிறார்**

# புத்தாயிரத்தில் புத்தொளி



கி.பி. ஓராயிரம் கழிந்து, ஈராயிரம் முடிந்து, புத்தாயிரம் (மூவாயிரம்) பிறந்துள்ளது. சென்ற இருபது நூற்றாண்டுகளில் உலகில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தொழிற்புரட்சி, வேளாண்மைப் புரட்சி, அறிவியல் புரட்சி முதலிய பலபுரட்சிகள் நடைபெற்றுள்ளன. ஆயினும், மானிட வாழ்வில் சில பின்னடைவுகளும், பண்பாட்டுச் சிதைவுகளும் ஏற்பட்டுள்ளன என்பது மறுத்தற்கு இயலாத ஒன்றாகும்.

இந்தியா இந்த நூற்றாண்டில் அரசியல் விடுதலை பெற்றது குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்ச்சியாகும். மக்களாட்சி பல்வேறு நாடுகளில் மலர்ந்துள்ளது. நமது நாட்டில் ஐம்பது ஆண்டுளாக மக்களாட்சிக் கோட்பாடு வேரூன்றி நிலைபெற்று விட்டமை மகிழ்ச்சிக்குரியதாம்.

தமிழ்நாட்டில் விடுதலைக்குப்பின் மொழி, கலை, சமுதாயவியல் போன்றவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. *மொழிவழி மாநிலங்கள் வரவேற்கத்தக்க சீரிய* அரசியல் கூறுகளாம். தமிழகத்தில் எங்கும் தமிழ், எதிலும் தமிழ், என்றும் தமிழ் என்பது முழக்கத்தோடு நிற்காமல் செயலாகவும் மாறிவருகிறது.

தமிழகத்தின் இன்றைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் *கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்* தமிழ் மொழிக்குப் பல்லாற்றானும் ஏற்றம் தந்தும், தமிழறிஞர்களைப் பேணியும் போற்றியும் வருவது பாராட்டுக்குரியது. புத்தாயிரத்தில் சென்ற சனவரி முதல்நாள் *(1-1-2000)* அன்று வரலாற்றுச்சிறப்புமிக்க

நிகழ்ச்சி தமிழகத்தின் தென்கோடியில் நடந்து முடிந்தது தமிழர்க்குப் பெருமகிழ்ச்சியும் பெருமையும் சேர்ப்பதாகும். உலகப் பொதுமறை அருளிய திருவள்ளுவருக்கு முக்கடல் சந்திப்பில் கன்னியாகுமரியில் 133அடி உயரச்சிலை நிறுவியது முதல்வர் அவர்களின் பல்வேறு நற்பணிகளுள் தலைசிறந்ததாகும். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்பதனை நடைமுறைப் படுத்தியுள்ளார் முதல்வர் அவர்கள்.

சங்கத்தமிழும் குறளோவியமும் இயற்றிய டாக்டர் கலைஞர் அவர்கள் சங்ககால மூவேந்தரின் இயல்புகள் பெற்றுள்ளார் என்பது மிகையாகாது. சங்ககாலத்தமிழகத்தை ஆண்ட அரசர் பலர், காவலராகவும், பாவலராகவும் - புவியரசராகவும், கவியரசராகவும் விளங்கியமை பலரும் அறிந்ததே அம்முறையில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் நல்ல காவலராகவும் (ஆட்சியாளர்) பாவலராகவும் - புவியரசராகவும், கவியரசராகவும் விளங்குவது தமிழகத்தின் நற்பேறாகும். ஆழ்ந்த புலமையும் அகன்ற பார்வையும் ஆட்சித்திறலும் ஒருங்கே அமைந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலும் பல நற்பணிகள் மேற்கொள்வார் என்பதில் ஐயமில்லை.

அடுத்த கல்விஆண்டிலிருந்து தமிழகப் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்புவரை தமிழே பயிற்று மொழியாகவும், பாடமொழியாகவும் இருக்கும் என ஆணைபிறப்பித்துள்ளமை வரவேற்கத்தக்கதொன்றாம். இத்திட்டத்திற்கு வரும் எதிர்ப்புகள் பொருளற்றவை. ஆங்கிலம் புறக்கணிக்கப்படவில்லை. மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் பயின்றாலே நல்ல தேர்ச்சி பெறமுடியும். பாடத்திட்டத்தில் ஏற்றவாறு மாறுதல்கள் செய்தல் வேண்டும். வாரம் இரண்டு வகுப்புகள் ஆங்கிலத்தில் பேச்சுப் பயிற்சி அளித்தல் வேண்டும். இவ்வாறு செய்தால் பத்தாம் வகுப்பு முடிகிறபோது மாணவர்கள் பயமின்றி ஆங்கிலத்தில் பேசவும் எழுதவும் பயிற்சி பெற்றுவிடுவார்கள்.

தமிழகத்தின் தலைநகரில் வள்ளுவர் கோட்டமும் தென்முனையில் வள்ளுவர் சிலையும் அமைத்து வள்ளுவருக்கு ஏற்றம் தந்த நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வள்ளுவர்கோட்டத்தில் இயங்கிவந்த திருக்குறள் இயக்கம் மீண்டும் செயல்படச் செய்தல் நன்று. மேலும், மதுரைத் தமிழ்ச்சங்க வளர்ச்சிக்குப் பேருள்ளம் கொண்டு நிதிவழங்கி உதவிய செயல் மறக்கற்பாலதன்று. முச்சங்கங்களுக்குப் பின்னர் மதுரையில் 1901ல் தமிழறிஞர் வள்ளல் பொன்.பாண்டித் துரைச்சாமித்தேவர் அவர்கள் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்தமை யாவரும் அறிந்ததே. நம் மதிப்புக்குரிய முதல்வர் அவர்கள் அப்பெருமகனார் பெயரில் தமிழக அரசின் சார்பில் ஒரு சிறந்த பரிசுத்திட்டத்தினை அறிவிப்பார்கள் என நம்புகிறோம்.

"தூங்காமை கல்வி துணிவுடைமை" இம்மூன்றும் நீங்காது நிலைகொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிதி அமைச்சராகவும், மதி அமைச்சராகவும் இருப்பதால் துணிந்து செயல்படுவார் என நம்புவோமாக. புத்தாயிரத்தில் புத்தொளி பரவட்டும்.

***வளர்க தமிழ்;***

***வாழ்க தமிழர்;***

**வாழ்க பாரதம்.**

# சொல்வலை

*-பேரறிஞர்* **அ.மா.பரிமணம்**

பறவைகள் விலங்குகள் நீர்வாழ்வுயிர்கள் போன்றவற்றைப் பிடிப்பதற்கு மனிதன் கண்ட கருவி 'வலை' எனப்படும். வானம் தரை நீர் ஆகியவற்றில், தன்னியல்பில் இயங்கிவாழும் உயிரினங்களின் ஊனினைத்தின்று தன்னூன் பெருக்கும் ஆசையால் அவற்றை வஞ்சகமாகப் பற்ற மனிதன் கண்டுகொண்ட கருவியே வலையாகும். பிடிக்க விரும்பும் உயிரினங்களுக்கேற்ப அவ்வலை கயிற்றாலோ, பிறவற்றாலோ அமைக்கப்படும். பிடிக்க விரும்பும் உயிரினங்களைக் கவரும்படியான பொருள்களைவைத்து அவை வந்தவுடன் வலையைத் தக்கவாறு செயற்படுத்தி அவற்றைப் பற்றுவர். வில்லின் வளைவு பிற உயிர்க்குத் தீங்கே பயப்பதுபோல வலையின் நெளிவும் பிற உயிர்களுக்குத் தீங்கே பயந்து நிற்கும்.

வலையினைப் பயன்படுத்துபவன் வலைஞன் எனவும், வேட்டுவன் எனவும் கூறப்படுகின்றான். பறவையினையும், விலங்கினையும் வலையால் பற்றுபவனைக் 'குறும்பூழ் (காடை) வேட்டுவன்', 'யானை வேட்டுவன்' என்னும் புறநானூற்றுத் தொடர்களாலும் அறியலாம். வலை என்னும் தனிக்கருவி யில்லாமல், தம் வாயினையே கருவியாக்கிக் கொண்டு மயில்போல, மானைப்போல, குரல் எழுப்பி அவற்றை வஞ்சகமாய் வருவித்துப் பற்றுவோரும் உள்ளனர். அவ்வாறு குரல் எழுப்ப வல்லவன் புள்ளுவன் எனப்படுவான். அதனால் புள்ளுவம் என்ற சொல்லுக்கு வஞ்சகம் என்னும் சொல்லும் அமைந்தது. முதிய வேடத்தில் வந்த சீவகன் இசைத்த இசையால் மயங்கிக் கேமசரியாரும், தோழிமாரும், புள்ளுவன் ஓசை கேட்டு மயங்கி வந்த மயிற் குலமாயினர் என்னும் கருத்தில்,

*"புள்ளுவம் மதிமகன் புணர்த்த ஓசைமேற் புகன்று*
*உள்ளம் வைத்த மாமயிற்குழாத்தின் ஓடி எய்தினார்"*
*(சீவக.2048)*

என்று திருத்தக்க தேவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊன்சுவை விரும்பிப் புள்ளோர்க்கும் புள்ளுவன் போலல்லாமல், மாயையில் உழலும் ஆன்மாக்களை அகப்படுத்திக்கொள்ளும் கருணையங்கடலாய இறைவனையும் வலைஞனாக, கானவனாக நினைந்துப் போற்றும் மரபுண்டு. "மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே" என்பர் மணிவாசகர் (திருவாசகம் 49-1). அவ்வாறு இறைவன் அருளும் பெருங்கருணையை அவர்,

*"காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்*
*நாட்டிற் பரிப்பாகன் நம்வினையை - வீட்டி*
*அருளும் பெருந்துறையான்" (திருவாசகம் 48-3)*

என வியந்து போற்றுவர்.

தமது கவர்ச்சியூட்டும் சொற்றிறமையால், பாவையரை மயக்கிக் கவரும் திறமையுடையானைச் சொல்வலைவேட்டுவன் என்று புறநானூறு காட்டுகின்றது. இளமையில் தன் பேச்சுத் திறமையால் பேச்சுவலையால் பாவைபோல்வாளை மயக்கிய ஒருவன் தன் முதுமையில், துறவுபூண்டு, தவமேற்கொண்டு, காட்டிலுறைந்து, அருவியில் நீராடித் தான் இலைபறித்து யானை தந்த விறகினால் எரியோம்பி விளங்கும் அரிய காட்சியினை மாற்பித்தியார் எனும் சங்கப்புலவர் காட்டுகின்றார். (புறம்.252) அப்பாடல் வருமாறு:

*"கறங்கு வெள் ளருவி ஏற்றலின் நிறம்பெயர்ந்து*
*தில்லை யன்ன புல்லென் சடையோடு*
*அள்ளிலைத் தாளி கொய்யு மோனே*
*இல் வழங்கு மடமயில் பிணிக்கும்*
*சொல்வலை வேட்டுவன் ஆயினன் முன்னே."*

தவக்கோலத்தில் எரியோம்பி நிற்கும் இவன். பறவை வேட்டுவன் போலப் பல மாதரைக் கவர்ந்தவன் அல்லன் என்பதனையும் தன் இல்வாழ்க்கைக்குரிய தலைவியினையே சொல்வலையால் அகப்படுத்திக் கொண்டவன் என்பதனையும் 'இல் வழங்கு மட மயில்' என்னும் தொடரில் குறிப்பிட்டிருப்பது நயமிக்கதாகும்.

இங்கு சொல்வலை வேட்டுவன் கொடுமை புரிபவனாக அல்லாமல். அன்பால் அரவணைப்பால் தலைவியை இல்லற வாழ்வில் ஏற்கும் சிறப்பினனாகக் காணப்படுகின்றான்.

வஞ்சகர்களின் மெய்போலும் பொய்ம்மொழியால் கவரப்பட்டு. மெய்யில்லா நெறியிற்சென்று. பல்லாண்டுகள் தம் வாழ்வின் பயனை இழந்து. எய்த்துப் பின் இறையருளால் மெய்நெறியினை எய்திப் பயன்பெற்ற அப்பரடிகள். மாறபித்தியார் பயன்படுத்திய 'சொல்வலை' என்னும் தொடரினைப் பயன்படுத்தித் தம் பட்டறிவினை - அனுபவத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

மருள்நீக்கியார் எனப் பிள்ளைத் திருநாமம் பெற்றிருந்த திருநாவுக்கரசர் மிக்க இளமையிலேயே அன்னையையும் அத்தனையும் இழந்தார். தமக்கென உறுதிசெய்விக்கப் பெற்றிருந்த கலிப்பகையார் போர்க்களத்தில் உயிர்விட முற்பட்டார். மருள்நீக்கியார் தம் வேண்டுகோளை ஏற்றுத் தமக்கை திலகவதியார். "தம்பியார் உளராக வேண்டும்" எனக்கொண்ட கருணையால். "அம்பொன் மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி" இருந்தார். பல்வகை அறங்களை மேற்கொண்டு வளர்ந்த மருள் நீக்கியார். உலகநிலையாமை உணர்ந்து. முழுத்துறவு மேற்கொண்டு. 'சமயங்கள் ஆனவற்றின் நல்லாறு தெரிந்துணரும். முயற்சியில் ஈடுபட்டார். அவர் எண்ணியாங்கு அவருக்கு. நல்லாறுணர்த்தும் திருவருள் கிடைக்கவில்லை. அந்நிலையில் கொல்லாமை

முதலிய அறங்களால் செல்வாக்கும், வாக்கின் வளத்தால் இளைஞரைக் கவரும் வன்மையும் உடையவர்களாய் விளங்கிய சமணர்களின் சொல்லில் மயங்கி அச்சமயம் புகுந்தார். அன்று முதல் (கிபி 7ஆம் நூற்றாண்டு) இன்றுவரை, தமிழ்மக்களிடையே வேற்றுச்சமயத்தோர் சமய மாற்றம் (மதமாற்றம்) செய்வதற்கு மேற்கொண்ட உத்திகளுள் 'சொல்வலைப்' படுத்துதலும் ஒன்றாகும் என்பதனை இதனாலும் உணரலாம்.

சமண சமயம் சார்ந்த மருள்நீக்கியார், தருமசேனராகிப் பின்னர்த் திருநாவுக்கரசராகப் போந்த வரலாறு சைவ வரலாற்றின் ஒரு பகுதியாகும். சமணர்களின் 'சொல்வலைத்'திறன் எத்தகையது என்பதனைச் சேக்கிழார், “வீடறியும் நெறி இதுவே” என மெய்போல் தங்களுடன் கூடவரும் உணர்வுகொளக் குறிபலவும் கொளுவினார்' என்று காட்டியுள்ளார். சொல்வலையில் மயங்கி, சமண சமயத்துறைபோகி நின்ற நிலையில், தமக்கையாரின் வேண்டுகையால் திருவருள் துணைக்கொண்டு மீண்டும் சைவசமயம் எய்தினார். அதனை அறிந்த சமணர், அரசன் துணையோடு நாவுக்கரசருக்குச் செய்த செயல்களை நினைக்குங்கால் சொல்வலை வேட்டுவர்களின் வஞ்சம் நிறைந்த கொடுமைகளை உணரலாம்.

சொல்வலை வேட்டுவர்கள் பின்னர்த் தமக்குச் செய்த கொடுமைகளைத் திருநாவுக்கரசரே தம் திருவாக்கில் குறிப்பாகவும், ஒரோவழி வெளிப்படையாகவும் வெளிப்படுத்தியுள்ளார். சைவத்திற்கு மீண்டபின்னர்ப் பதிகள் தோறும் சென்று பதிகம் பாடும் தொண்டினையும், உழவாரத்தொண்டினையும் மேற்கொண்ட திருநாவுக்கரசர் பழையாறை வடதளி வணங்கித் திருவானைக்கா செல்லுங்கால் இடையே பூவனூர் என்னும் தலத்திற்குச் சென்று, வழக்கம்போலப் பதிகம் பாடி இறைவனை வழிபடுகின்றார்.

பூவனூர் புனிதனைப் பாடிப்பரவும் அத்தினம், முன்பு சமண சமயத்திலிருந்து சிவநெறிக்கு மீண்டுவந்த நாள் ஆகும் என்பது நாவுக்கரசரின் நினைவிற்கு வருகின்றது. அச்செய்தியை அப்பதிகத்தின் ஒன்பதாம் பாடலில் வெளிப்படுத்தியுள்ளார். *அது வருமாறு:*

*"ஏவம் ஏது மிலா அமண் ஏதலர்*
*பாவ காரிகள் சொல்வலைப் பட்டு நான்*
*தேவ தேவன் திருநெறியாகிய*
*பூவ னூர்புகு தப்பெற்ற நாள் இன்றே"*

*(திருநாவு.5-65-9)*

'சமணர்கள் விதிவிலக்குகள் அற்றவர்; அயலவர்கள்; பாவச்செயலே புரிபவர்களாவர். அவர்களுடைய சொல்வலையில் மயங்கி அகப்பட்டு உழன்றேன். அவர்களின் அவநெறியிலிருந்து மீண்டு தேவதேவனாகிய *சிவபரம்பொருளின் திருநெறிக்கு நான் திரும்பிய நாள் இன்றே* யாகும்' என்பது பாடற்கருத்து. தம்மை மயக்கிய சமணர்களைப் பாவகாரிகள் என்றும், அவர்தம் வஞ்சக வாய்மொழிகளைச் சொல்வலை என்றும் நாவுக்கரசர் குறித்திருப்பது சிந்திக்கத்தக்கது.

மெய்யுணர்வு வாய்க்கப்பெறாத மக்கட்கு *ஐம்பொறிகளாலும் நுகர்தற்குரிய இந்த உலகம்* இன்பமயமானதாகத் தன்னைக் காட்டி மயக்கும். மெய்யுணர்வு கைவரப்பெற்ற பெருமக்கட்கு இவ்வுலகம் ஐ வகையால் மயக்கி அகப்படுத்தும் வலையாகவே தோன்றும். அவர்கள் அந்த மயக்க வலையுள் அகப்படாது ஓடி உய்தலையே நாடுவர். நாவுக்கரசர் தம் இறுதிக் காலத்தில், "ஒழுகிய கண்பொழி புனலும் ஓவாது சிவன்தாள்கள், தழுவிய சிந்தையில் உணர்வும்" கொண்டவராய்ப் "பொய்ப்பாசம் போக்குபவராய்ப்" பூம்புகலூர் சென்றடைகிறார். உலக இன்பப் பொருள்களாகிய பாசவலை அவர்முன்னே விரிகின்றது. உழவாரம் பட்ட இடத்தில் தோன்றிய பொன்மணிகளை உழவாரத்தால் ஏந்தி வாவியில்

வீசுகின்றார். தேவமாதர்கள் திருநடமிட்டு மயக்குகின்றனர். சித்தநிலை திரியாது திகழ்கின்றார். இறுதியாகப் 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்' என்று கூறி இறைவன் திருவடி அடைகின்றார்.

இந்த மெய்ஞ்ஞானி, தலப்பயணத்தின்போது திருமாத்தூர் அடைகின்றார். அங்குப் பாடும்போது, உலகமயக்கில் படுவதற்கு அஞ்சி ஆமாத்தூர் அப்பனை நெஞ்சினால் நினைத்ததாகவும், அப்போதே நெஞ்சத்திருந்து வஞ்ச ஆறுகள் வற்றின என்பதாகவும் கூறிய திருப்பாடல் வருமாறு:

*"பஞ்ச பூத வலையில் படுவதற்கு*
*அஞ்சி நானும் ஆமாத்தூர் அழகனை*
*நெஞ்சினால் நினைந்தேன் நினைவு எய்தலும்*
*வஞ்ச ஆறுகள் வற்றின காண்மினோ"* (நாவுக். 5-44-4).

பஞ்சபூத உருவான வஞ்சவலையில் பட்டு மக்கள் உழலாமல் உய்வதற்கு நாவுக்கரசர் காட்டிய நன்னெறி இதில் இலங்கக் காணலாம்.

பற்றப் பட்டவற்றிற்குப் பெரும்பாலும் துன்பமே விளைக்கும் 'வலை'யினைச் 'சொல்வலை' என உருவக வகையால் மாற்பித்தியார் காட்டியுள்ளது, அவ்வகையில் அமையும் பல உருவகத்தொடர்களுக்கு முன்னோடியாயது. உழவர், 'சொல்லேருழவர்', வில்லேருழவர்' முதலிய தொடர்க்கு அடிப்படையாயதுபோல, வலையும் சொல்வலை, சினவலை (சிலப்-26-234) பத்திவலை (திருவா 3-42), கண்வலை (குறுந்-84-7) என்றிங்ஙனம் பலவாறாக உருவகத் தொடர்கள் தோன்ற அடிப்படையாயது. வலை, வலைஞன் பற்றிய செய்திகள் பிறர்க்குத் துயர்விளைவிப்பனவாகப் பெரும்பாலும் அமைந்தபோதிலும், இறையியல் தொடர்பாக அமையுங்கால் நன்மை பயப்பனவாக அமையுமாற்றினைப், பத்திவலையில் படுவோன் காண்க', 'மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படுமாயிடிலே' என்பன போன்ற அருளாளர் காட்சியில் தெளியலாம்.

# எல்லோருக்கும் தொல்காப்பியம்

- பேரறிஞர் நா.பாலுசாமி

*(முன்னிதழ்த் தொடர்ச்சி)*

## சூத்திரம் 421:

*உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே*
*பலர்சொல் நடைத்தென மொழிமனார் புலவர்*

*(பொ-ரை)* உயர்திணையில் வரும் உம்மைத் தொகை பலர்பால்விகுதி கொண்டு முடியும்.

*(எ-டு)* கபிலர் + பரணர் - கபிலபரணர்
சேரன், சோழன், பாண்டியன் - சேர சோழ பாண்டியர்
(கபிலரும் பரணரும், சேரனும் சோழனும் பாண்டியனும் என உம்மை விரியும்)

## சூத்திரம் 422:

*வாரா மரபின வரக்கூ றுதலும்*
*என்னா மரபின எனக்கூ றுதலும்*
*அன்னவை எல்லாம் அவற்றவற் றியல்பான்*
*இன்ன என்னும் குறிப்புரை ஆகும்.*

*(பொ-ரை).* வாராதவற்றை வருவனவாகக் கூறுதலும், என்னா என்பனவற்றை என்பனவாகக் கூறுதலும், அத்தன்மையன. எல்லாம் அவ்வப்பொருளின் இயல்பால் இத்தன்மையன என்று கூறுதலும் குறிப்பு மொழிகளாம். (என்னா - எதிர்மறை; என்பன - உடன்பாடு).

இச்சூத்திரம் குறிப்புச் சொல்லின் இயல்பு கூறுகிறது.
(எ-டு) அம்மலை வந்து இதனோடு பொருந்தியது - இத்தொடரில்

1) வரமுடியாத மலை வந்ததாகக் கூறப்பட்டது காண்க. இது வாராமரபின வரக் கூறுதலாம்.

2) மழை மழை என்கின்றன் பயிர்கள் - இதில் பயிர்கள் கூறமுடியாது. ஆனால் கூறுவதாக (கேட்பதாக) வருகிறது. இஃது என்னா மரபின எனக்கூறுதலாம்.

*விளக்கம்:* பேசாத தன்மையுடையன பேசுவதாகக்கூறுதலும் பயிர்கள் செழிக்க மழை வேண்டும். வேண்டும் என்று கேட்க இயலாத பயிர்கள் கேட்பதாகக் கூறப்பட்டது. இவ்வாறு இவை குறிப்பால் பொருள் உணர்த்தின.

**சூத்திரம் 423:**

*(இசை அடுக்கு)*

*இசைப்படு பொருளே நான்கு வரம்பாகும்*

**சூத்திரம் 424:**

*(விரைவு அடுக்கு)*

*விரைசொல் அடுக்கே மூன்று வரம்பாகும்*

*(பொ-ரை)* இசைநிறைக்க வரும் அடுக்குச்சொல் நான்கு முறை அடுக்கிவரும்: அதற்குமேல் வாராது. விரைவு குறித்து வரும் அடுக்குச் சொல் மூன்று முறைக்கு மேல் வாராது. குறைந்து வரலாம். இசைப்படுபொருள் - செய்யுள் இன்பம். விரை சொல் - விரை படுத்தும் சொல்.

*(எ-டு)* "பாடுகோ, பாடுகோ, பாடுகோ, பாடுகோ" - செய்யுள் இன்பம் நோக்கி நான்குமுறை அடுக்கி வந்தது. (பாடுகோ - பாடுங்கள்).

"தீ தீ தீ" - விரைவுபற்றி மும்முறை அடுக்கியது. இவற்றிற்கு மேல் எல்லை கூறப்பட்டது.

**சூத்திரம் 425:**

*(அசை அடுக்கு)*

*கண்டீர் என்றா கொண்டீர் என்றா*
*சென்றது என்றா போயிற் றென்றா*
*அன்றி அனைத்தும் வினாவொடு சிவணி*

*நின்ற வழி அசைக்கும் கிளவி என்ப.*

*(பொ-ரை)* கண்டீர் என்றும், கொண்டீர் என்றும் சென்றது என்றும், போயிற்று என்றும் வரும் வினைச் சொற்கள் நான்கும் வினாவோடு பொருந்தி வரும்போது வினைச்சொல் அடுக்கு எனப்படும்.

என்றா - என்றும். சிவணி - சேர்ந்து. பொருந்தி அசைக்கும் கிளவி - அசைச் சொற்கள். அசைச்சொற்கள் அடுக்கி வந்தால் அவை அசைச்சொல் அடுக்கு எனப்படும்.

*(எ-டு)* உரையாடும்போது ஒருவன் ஒரு செய்தி சொல்ல, அதற்கு உடன்ப் படாதான் ஒருவன், கண்டீரே (பார்த்தீரே) கண்டீரே என்று கூறுவான். இவ்வசைச்சொல் (கண்டீரே) என்பது இன்றும் மக்களிடையே "பார்த்தியா, பார்த்தியா" என்று வழங்கப்படுகிறது. இங்கே, கண்டீரே என்பது வினைமுற்றும் அன்று; வினாப் பொருளும் தருவதன்று. அசை அடுக்கேயாம்.

இவ்வாறே பிறவற்றையும் கண்டுகொள்க; இன்று இவை வழக்கில் பெரும்பான்மையும் இல்லை.

## சூத்திரம் 426:

*கேட்டை என்றா நின்றை என்றா*
*காத்தை என்றா கண்டை என்றா*
*அன்றி அனைத்தும் முன்னிலை அல்வழி*
*முன்னுறக் கிளந்த அசையா கும்மே.*

*(பொ-ரை)* கேட்டை, நின்றை, காத்தை, கண்டை ஆகிய இந்நான்கும் முன்னிலைகளாக வாராதபோது, முற்கூறப்பட்டவை போன்றே அடுக்கிவரும் அசைச் சொற்களாம். நின்றை, காத்தை என்பன இன்று அருகிவரலாயின.

இருவர் உரையாடல் செய்யும் போது இவை அடுக்கியும் சிறுபான்மை அடுக்காதும் அசைகளாக வரும்.

கேட்டை, கண்டை என்பன இக்காலத்தில் மக்களிடையே "கேட்டியா, கேட்டியா", கண்டியா (பார்த்தியா) கண்டியா என வழங்கிவருதல் காணலாம். இவை அசைச் சொற்களே: வினைச்சொற் பொருள் தாரா.

## சூத்திரம் 427:

*(வினைமுற்றுக்கள்)*

*இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றச்*
*சிறப்புடை மரபின் அம்முக் காலமும்*
*தன்மை முன்னிலை படர்க்கை என்றும்*
*அம்மூ இடத்தான் வினையினும் குறிப்பினும்*
*மெய்ம்மை யானும் இவ்விரண்டாகும்*
*அவ்வா றென்ப முற்றியல் மொழியே.*

*(பொ-ரை)* இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்னும் மூன்று காலமும், தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்று இடமும், உயர்திணை, அஃறிணை, பொதுத்திணை ஆகியவற்றின் பொருள்தோறும், தெரிநிலையாகவும், குறிப்பாகவும் இரண்டிரண்டாய் ஆறுவகை முற்றுவினைகள் இயங்கும் எனக் கூறுவர் இலக்கணப்புலவர்.

மெய்ம்மையானும் - இருதிணைப்பொதுப் பொருள். பொதுப்பெயர் விரவுப்பெயர் எனவும்படும். தெரிநிலை - காலத்தை வெளிப்படையாகக்காட்டும் வினைமுற்று: அவ்வாறு இன்றிக் காலத்தைக் கூறுவோன் குறிப்பின் வழிக்காட்டும் வினைக் குறிப்பு வினை எனப்படும்.

*(எ-டு)* சென்றான் - தெரிநிலை (இறந்த காலம் காட்டிற்று).
கரியன் - குறிப்புமுற்று. இது முன்னதைப் போலக் காலம்

வெளிப்படையாகக் காட்டவில்லை. அஃதாவது காலம் காட்டும் இடைநிலைகள் குறிப்பு முற்றில் இல்லை. கூறுவோன் எக்காலத்தைக் குறித்துக் கூறுகிறானோ அக்காலத்தை உணர்த்துவது குறிப்பு வினை.

கூறுவோன் இன்று கரியன் என்று நினைத்துக் கூறினால் நிகழ்காலம் உணர்த்தும்; நேற்றுக் கரியன் எனக் கூறி இறந்த காலம் காட்டும் இவ்வாறே எதிர்காலமும் கொள்க.

உண்டான் (தெரிநிலை), கரியன் (குறிப்பு) - உயர்திணை முற்றுகள் உண்டது, கரிது - அஃறிணை முற்றுகள்.

உண்டனை, கரியை (முன்னிலை) - விரவுத்திணை அஃதாவது இவை உயர்திணை, அஃறிணை இரண்டிற்கும் வந்து விரவுத்திணை ஆயின என அறிக.

**சூத்திரம் 428:**

*எவ்வயின் வினையும் அவ்வியில் நிலையும்*

*(பொ-ரை)* மூவிடத்தால் திணைப் பொருளோடு இரண்டிரண்டாய் வரும் என முன் சூத்திரத்தில் கூறப்பட்ட விதிகளில் அடங்காமல் வரும் பிறவினைச் சொற்களும் முற்று வினைகளாக அமையும்.

*(எ-டு)* யார்? எவன்? இல்லை: உண்டு என்பன இடம் குறித்துவரவில்லை. எனினும் இவையும் வினைமுற்றுகளே. வினை - வினைச்சொல்லின் பகுதி (முதல் நிலை) என அறிக.

**சூத்திரம் 429:**

*அவைதாம்*
*தத்தம் கிளவி அடுக்குந வரினும்*
*எத்திறத் தானும் பெயர்முடி பினவே*

*(பொ-ரை)* மேலே சொல்லப்பட்ட முற்றுச் சொற்கள் பல அடுக்கி

வந்தாலும் தம்முள் தொடர்ந்து எவ்வாற்றானும் பெயர் கொண்டுமுடியும்.

*(எ-டு)* உண்டான், நின்றான், ஓடினான், பாடினான், சாத்தன் எனவும்.

நல்லறிவு உடையன் செவ்வியன் (நேர்மையாளன்) சான்றோர் மகன் எனவும் வரும்.

இவற்றில் முறையே தெரிநிலை, குறிப்பு வினை முற்றுகள் அடுக்கி வந்து ஒரு பெயரோடு முடிந்தமை காண்க.

இனி, இவ்வாறு அடுக்கி வாராமல், வந்தான் பாண்டியன், கரியன் கண்ணன் எனத்தனித் தனியே வரினும் பெயர் கொண்டே முடியும். இவ்வாறு முடிவதே பெரும்பான்மை.

## சூத்திரம் 430:

*(பல வகை எச்சங்கள்)*

*பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை*
*எதிர்மறை உம்மை எனவே சொல்லே*
*குறிப்பே இசையே ஆயீ ரைந்தும்*
*நெறிப்படத் தோன்றும் எஞ்சுபொருள் கிளவி.*

*(பொ-ரை)* பிரிநிலை எச்சம், வினையெச்சம், பெயரெச்சம், ஒழியிசை எச்சம், எதிர்மறை எச்சம், உம்மை எச்சம், என என்னும் எச்சம், சொல்லெச்சம், குறிப்பெச்சம் ஆகிய பத்துவகை எச்சங்கள் இச்சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளன.

எச்சம் - பொருள் முடியாமல் மிஞ்சியிருப்பது. (எ-டு) வந்து - எச்சம்; வந்தான் - முற்று. எஞ்சுபொருள் கிளவி - எச்சப்பொருள்படும் சொற்கள். எச்சங்கள் பத்து வகைப்படும் என்பதாகும்

இவற்றின் விளக்கம் பின்வரும் தனித்தனிச் சூத்திரங்களில் காண்க.

**சூத்திரம் 431:**

*(பிரிநிலை)*

*அவற்றுள்*
*பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின.*

*(பொ-ரை)* மேலே கூறப்பட்ட எச்சங்களுள் பிரிநிலை எச்சம், ஏகாரப் பிரிநிலையும் ஓகாரப் பிரிநிலையும் என இருவகைப்படும். இவ்விருவகை எச்சங்களும் பிரிக்கப்பட்ட பொருளை உணர்த்தும் சொல்லோடு முடியும். பிரிவினை - ஒன்றைப் பிறிதொன்றிலிருந்து பிரித்துக் கூறுவது.

*(எ-டு)* தானே கொண்டான், தானோ கொண்டான் எனப்படும் ஏகார, ஓகாரப் பிரிநிலை எச்சங்கள், பிறர் கொள்ளவில்லை எனப் பிரிக்கப்பட்ட பொருளை உணர்த்தும் சொல்லால் முடிந்தவாறு காண்க. தானே - 'ஏ' பிரிநிலை: தானோ - 'ஓ' பிரிநிலை. தானே கொண்டான் - இதில் 'பிறர்' கொள்ளவில்லை என்ற பொருளைத் தரும் தொடரைக் கொண்டு முடிகிறது. 'பிறர்' என்பது பிரிக்கப்பட்ட பொருள், 'ஏ' என்பது பிரிநிலைப் பொருள் தரும் இடைச்சொல். இவ்வாறே 'ஓ' என்பதற்கும் கொள்க.

**சூத்திரம் 432:**

*(வினையெச்சம்)*

***வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்***
***நினையத் தோன்றிய முடிபா கும்மே***
***ஆவயின் குறிப்பே ஆக்கமொடு வருமே.***

*(பொ-ரை)* வினையெச்சம் தெரிநிலை வினைமுற்றோடும், குறிப்பு

வினை முற்றோடும் முடியும். குறிப்பு - வினைமுற்றோடு, முடியும்போது ஆக்க வினையோடு வரும்.

*(எ-டு)* தெரிநிலை வினைமுற்று - காலம் வெளிப்படையாகக் காட்டும். (எ-டு) வருகிறான் - நிகழ்காலம், வந்தான் - இறந்த காலம், வருவான்-எதிர்காலம்.

குறிப்பு வினை காலத்தை வெளிப்படையாகக்காட்டாது குறிப்பாக உணர்த்தும் (எ-டு) கண்ணன் கரியன் - கரியன், குறிப்பு வினைமுற்று. இது சொல்வோன் குறிப்பின்படி காலம் உணர்த்தும். கூறுகிறவன் நிகழ்காலத்தை மனத்தில் குறித்துக்கொண்டு கரியன் எனக் கூறினால், கரியன் என்பது நிகழ்காலம் உணர்த்தும். அஃதாவது காலம் காட்டும் இடைநிலைகள் குறிப்பு வினைமுற்றில் இரா..

"ஆக்கமொடுவரும்" என்பது கரியனாயினான் என்றுகூறும்போது ஆயினான் என்பது ஆக்கச்சொல். சூரியனாக மாறியுள்ளான் என்பது பொருள். ஆக்கம் பெறாமலும் வரும்.

இனி, வினையெச்சம், உழுதுவருதல், உழுதுவந்தவன் எனத்தொழிற்பெயரோடும், வினையாலணையும் பெயரோடும் வருவதும் உண்டு. வருதல் - தொழிற்பெயர்; வந்தவன் - வினையாலணையும்பெயர். (ஆவயின் - அவ்விடத்து).

## சூத்திரம் 433:

*(பெயரெச்சம்)*

*பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே.*

*(பொ-ரை)* பெயரெச்சம் பெயர் கொண்டு முடியும். 'ஏ'-அசை.

*(எ-டு)* உண்ணும் கொற்றன், உண்டகொற்றன் என வரும். கொற்றன் - பெயர். உண்ணும், உண்ட முறையே நிகழ்கால, இறந்தகாலப் பெயரெச்சங்கள்.

## சூத்திரம் 434:

*(ஒழியிசை)*

*ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின.*

*(பொ-ரை)* ஒழியிசை எச்சம் என்பது ஒழிந்த பொருள் கொண்டுமுடியும். இசை - சொல்; இங்குச் சொல்தரும் பொருள் குறித்து.

*(எ-டு)* இவ்வாள் கூர்மை உடையதோ? - இத்தொடர் கூர்மை இல்லாதது என்னும் பொருளைத் தருவதாகும். இவ்வெச்சம் மன், தில், ஓ ஆகிய இடைச்சொற்களைப் பெற்று மூன்று வகையாக வரும்.

(அ) "கூரியதோர் வாள் மன்" - கூரியது அன்று என்பது பொருள்

(ஆ) "வருகதில் அம்ம எம்சேரி" - வந்தால் இன்னது செய்வேன் என்பது பொருள்

(இ) "கொளலோ கொண்டான் - (ஓ) கொண்டு வாழப் போவது அறியான் என்பது பொருள்

இவ்வாறு மன், தில், ஓ என்னும் இசைச்சொற்களைப் பெற்று மேல்கண்ட ஒழிந்த பொருள்களைத் தருவதால் ஒழியிசை எச்சமாயிற்று.

## சூத்திரம் 435:

*(எதிர்மறை)*

*எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின.*

*(பொ-ரை)* எதிர்மறை எச்சங்கள் எதிர்மறையாக முடியும். இவ்எதிர்மறை எச்சம் ஏகார எதிர்மறை, ஓகார எதிர்மறை உம்மை எதிர்மறை என மூவகைப்படும். இங்கு ஏ,ஓ,உம் என்ற மூன்று இடைச்சொற்களைப் பெறுகின்றன எதிர்மறை எச்சங்கள்.

*(எ-டு)* (அ) யானே கொள்வேன் - (ஏ) கொள்ளேன் என்னும் எதிர்மறைப் பொருள் தருவது

(ஆ) "யானோ அரசன்" - (ஓ) அரசன் அல்லன் என்னும் எதிர்மறைப் பொருள் தரும்.

(இ) பேசவும் செய்வான் - (உம்) பேசான் என்னும் எதிர்மறைப் பொருளது.

இவ்வாறு எதிர்மறை எச்சம் எதிர்மறைப் பொருளோடு முடிந்தவாறு காண்க. எதிர்மறை எச்சம் மாறுகோள் எச்சம் எனவும் படும்.

**சூத்திரம் 436:**

*('உம்' எச்சம்)*

*உம்மை எச்சம் இருவீற் றானும்*
*தன்வினை ஒன்றிய முடிபா கும்மே.*

*(பொ-ரை)* உம் என்னும் இடைச்சொல் எச்சம் இரு தொடராகவே வந்து தன்வினை கொண்டு முடியும்

*(எ-டு)* செய்தான் - தன்வினை. செய்வித்தான் - பிறவினை.

*(எ-டு)* சாத்தனும் வந்தான் கூத்தனும் வந்தான் என இரண்டும் 'வந்தான்' என்ற ஒரே வினைமுற்றால் முடிந்தது காண்க.

சாத்தனும் வந்தான் என்பது எச்சத் தொடராயின், கூத்தனும் வந்தான் என்பது எஞ்சிய பொருள். கூத்தனும் வந்தான் என்பது எச்சத் தொடராயின், சாத்தனும் வந்தான் என்பது எஞ்சிய பொருள் என அறிக. இரண்டு தொடர்களுக்கும் ஒரு வினைமுற்று முடிவாகும் என்பது கருத்து.

*...(தொடரும்...)*

# இலக்கணக் கொள்கைகளும் தெ.பொ.மீயின் பார்வையும்

- *பேரறிஞர் செ.வை.சண்முகம்*

## 1. முன்னுரை

தெ.பொ.மீ. தமிழியலுக்கும் தமிழுக்கும் ஆற்றிய பங்களிப்பை இனம் காணவும், மதிப்பிடவும் அவருடைய நூற்றாண்டு விழாவின் முன்னோடியாக, நூற்றாண்டு விழா நெருங்கிக் கொண்டிருக்கும் நேரத்திலேயே மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல் புலம் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்திருப்பது பாராட்டி வரவேற்கத்தக்கது.

இந்தியாவில் கல்வி நிறுவனப்படுத்தப்பட்ட பின் இரண்டு பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன 1.முதுகலைப் படிப்பு ஆய்வுப்பட்டமாக இருந்தது ஒரு முழுநேர கல்விப் பாடமாக மாறியது. அது நாற்பதுகளில்(?) துவங்கியது. 2. பட்டச் சிறப்பு வகுப்பும் பி.ஏ.ஹானர்ஸ்., முதுகலைப் படிப்பும் ஒன்றாக இருந்ததில் முன்னது போய் முதுகலைப் படிப்பு மட்டும் ஏற்பட்டது. அது அறுபதுகளில் தொடங்கியது. இவை தமிழ்க் கல்வியையும் பாதித்தன. இந்த இரண்டு மாற்றங்களின்போதும் பாடத்திட்டம் உருவாக்கவும், கற்பிக்கவும் தெ.பொ.மீக்கு வாய்ப்புக் கிடைத்தது. அந்த வரலாறு விரிவான ஆய்வுக்குரியது.

தமிழியலுக்கு அவருடைய முதல்பங்களிப்பு ஒப்பிலக்கியத்தை இப்பல்கலைக்கழக நிலையில் 60களில் தமிழ்த்துறையில் ஒரு பாடமாக்கி இந்தத்துறையில் ஆய்வாளர்களுக்கும் வழிகாட்டியது. அப்போது பல தமிழாசிரியர்கள் முணுமுணுத்தாலும் இன்று ஒரு சிறப்பான தேவையான பாடமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதைக் காணும்போது தமிழியலின்

தளத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற அவருடைய நெடுநோக்குத் திட்டம் பரிணமித்து வளர்ந்துள்ளது மகிழ்ச்சியை அளிக்கிறது.

அவருடைய இரண்டாவது பங்களிப்பு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல்துறைக்கு உருவம்கொடுத்து அதைப் பயிற்றுவிக்கும் துறையாகவும் அமைத்து அதற்கு அனைத்திந்திய நிலையில் ஒரு அங்கீகாரம் பெற்றுத்தந்து தென்னகம் முழுமையும் மொழியியலைப் பரப்பியது. அதன் ஒரு பகுதியே அவருடைய இலக்கணத் துறையில் ஆய்வும், ஆய்வுவழிகாட்டியும். இலக்கண-மொழியியல் கோட்பாடு, இலக்கியக் கோட்பாடு, மொழிவரலாறு ஆகியவை உருவாகவும் அவர் உழைத்தார். இதனால் பழைய பாடங்கள் புதிய நோக்குப்பெற்றன.

தமிழுக்கு அவர் செய்த தொண்டு தமிழைத் தமிழரல்லாதோர் அறியச்செய்தது. இதுவும் இரண்டு பரிணாமம் உடையது. ஒன்று அவருடைய ஆங்கில நூல்கள், கட்டுரைகள் மற்றொன்று அவர் சிகாகோ பல்கலைக்கழகத்தில் தமிழ்க் கல்வி தொடங்க வழிகாட்டியதோடு அறிஞர் என்ற முறையில் அங்குத்தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் மொழி வரலாறு என்ற இரண்டு தலைப்பில் பத்துப் பத்துச் சொற்பொழிவுகள் செய்து நூல்களாக வெளியிட்டுத் தமிழ் ஆய்வுக்குப் பரந்த அளவில் அடித்தளம் இட்டது ஆகும். அங்கும் அவருடைய மொழி வரலாறு முற்றும் புதுமையானது, அறிவியல் சார்ந்தது.

## 2. பொதுப்பார்வை

ஒரு அறிஞரைப் பிற அறிஞர்களிடமிருந்து வேறுபட்டுத்திக் காட்டுவது அந்த அறிஞருடைய பொதுத் திறமையும் பார்வையுமே.

அன்றும் இன்றும் இரு மொழி அறிஞர்கள் அதிகம்; பன்மொழி அறிஞர்கள் மிகக்குறைவு. தெ.பொ.மீ. ஒரு பன்மொழி அறிஞர் (வடமொழி, ஆங்கிலம், பிரெஞ்சு, மலையாளம், தெலுங்கு, கன்னடம்). அடுத்து பல்துறைப் புலமை - வரலாறு, கல்வெட்டியல், தத்துவம், இலக்கியம், இலக்கணம், மொழியியல் ஆகிய துறைகளில் ஆழ்ந்த புலமை தமிழிலும் சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், சமய இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், தற்கால இலக்கியங்கள், இலக்கணங்கள் (தமிழ் இலக்கணங்கள், பிற மொழியில் எழுதப்பட்ட தமிழ் இலக்கணங்கள்), கல்வெட்டுக்கள் என்று பரந்து அகன்ற புலமை. இருந்தாலும் ஒருவருடைய பார்வையே (வாழ்க்கைப் பார்வை, ஆய்வுப்பார்வை) ஆய்வுலகில் நிலைத்த புகழைத் தரும் என்ற முறையில் அவருடைய பொதுப்பார்வை பற்றி எனக்குத் தெரிந்தவை, புரிந்தவைகளை முதலில் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு நூலையும் அல்லது ஒரு கருத்தையும் அது எழுந்த காலத்து உள்ள சமூகப் பண்பாட்டு அரசியல் நிலையில் வைத்துப் பார்க்கும் வரலாற்றுப் பார்வை அவரிடம் காணப்படும் ஒரு பொதுப்பார்வை. இதற்கு அவர் முதன்முதலில் வரலாற்றில் முதுகலைப்பட்டம் பெற்றதும் ஒரு காரணமாக இருந்தாலும், பன்மொழிப் புலமையும், பல்துறை அறிவும், தமிழின் முழுப்பரப்புப் பற்றிய அறிவுமே முக்கிய காரணங்கள். அதனால் ஒரு நூலைக் குறை கூறும் பழக்கம் அவரிடம் காணப்படவில்லை. அதே சமயத்தில் பரவலாகப் படிக்கப்படாத நூலையும் வரலாற்று நோக்கில் அதன் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துவது காணமுடிகிறது.

வீரசோழிய இலக்கணம் வடமொழிக் கருத்துக்களைப் புகுத்தியதால் அது பரவலாகப் படிக்கப்படுவதில்லை. ஆனால் தெ.பொ.மீ அதன்

சிறப்புகளாகவும் பயன்களாகவும் கூறும் கருத்துக்கள் கவனத்துக்குரியவை. (1974அ 6,34)

1. தமிழ் இலக்கணத்தை வடமொழி இலக்கண மரபையும், கொள்கையையும் ஒட்டிப் படிக்க உதவும் நூல்.

2. ஐந்திலக்கண மரபை அறிமுகப்படுத்தியது. (இதில் கருத்து வேறுபாடு இல்லை).

3. பொது மக்கள் மொழியை - கல்லாதவர்கள் பேசும் மொழியை ஆராய்வது.

4. அவர்களால் கல்வெட்டு மொழிக்கு உரிய இலக்கணமாகக் கருதலாம். (இவை பற்றிய சில விமர்சனத்துக்கு, சண்முகம், 1980ஆ, பார்க்கவும்).

பொதுவாக வடமொழி இலக்கண மரபை ஒட்டி எழுதப்பட்ட இலக்கண நூல்களைத் திராவிட மொழி இலக்கணங்களுக்குள் காணப்படும் ஒற்றுமை-வேற்றுமைகளை அறிவதற்கு உதவுவதைத் தெரிந்துகொள்ளும் முயற்சியாகவே அவருடைய Foreign Models in Tamil Grammar என்ற நூல் எழுதப்பட்டுள்ளது.

ஐரோப்பியர் எழுதிய சிறிய அறிமுக இலக்கணங்களும் தமிழ்மொழியின் வரிவடிவ வரலாறு தமிழ் எழுத்துக்களின் ஒலி மதிப்புகள் போன்றவைகளை அறியும் நல்ல சான்றுகளாகக் கொண்டு ஆராய்ந்துள்ளார் (மீனாட்சிசுந்தரம் 1961). அது உண்மையில் தமிழியலுக்கு ஒரு பரிமாணத்தைச் சேர்த்ததோடு கிறித்தவத்தமிழ்த் துறை என்ற துறையும் பின்னால் வளர அடித்தளம் அமைத்தது. அத்தோடு, தமிழியல் தமிழைப் பற்றிப் பிறமொழியாளர் பிறமொழிகளில் எழுதியவைகளும் ஆய்வுக்களங்களாக அமைந்தன.

ஐம்பது அறுபதுகளில் திருக்குறள் பரிமேலழகர் உரை வடமொழி மரபைத் தழுவி எழுதப்பட்டது என்று கடுங்கண்டணத்துக்கு உள்ளானது. அது அன்றைய திராவிட இயக்கத்தின் ஒரு விளைவு. அதாவது அன்றைய சமூக அரசியல்நிலை, கல்வி உலகில் ஏற்படுத்திய தாக்கம் அது. அப்போது தெ.பொ.மீ ஒரு ஆய்வுநிலை சார்ந்த விளக்கம் கொடுத்தது குறிப்பிடத்தக்ககது. இன்றைய ஆய்வாளர்கள் மேலைநாட்டு அறிஞர் கருத்துக்களை மேற்கோள் காட்டிப் பேசுவதும் எழுதுவதும் போலத்தான், பரிமேலழகர் அவர் காலத்தில் தமிழ் அறிஞர்களிடையே வடமொழிக் கருத்துக்கள் பரவலாக அறியப்பட்டிருந்த காரணத்தால் அவைகளை எடுத்துக் காட்டியுள்ளாரே தவிர அதற்கு வேறு பொருள் கற்பிக்கக்கூடாது என்ற அவருடைய விளக்கம் எதிர்ப்பின் வேகத்தை ஓரளவு தணித்தது.

இலக்கணக் கல்வியைப் பொறுத்தவரையில் அவர் மூலமும் உரையும் தனித்தனியே படிக்கப்பட வேண்டும் என்ற கருத்து உடையவர். அதுவும் மாறுபாட்டுக்கு உள்ளானது. சிலரால் உரை இல்லாமல் இலக்கண நூலைப் படிப்பது என்பது பற்றி எண்ணிக் கூடப் பார்க்க முடியாத செயலாகக் கருதப்பட்டது. தெ.பொ.மீயின் கருத்துக்கு இரண்டு முக்கிய காரணங்கள். 1. கோட்பாடு அடிப்படை 2. வரலாற்று அடிப்படை. இலக்கண உரை அந்த உரையாசிரியரின் காலம் வரை இலக்கிய மொழியில் நடந்த வரலாற்று மாற்றங்களையும் மூல சூத்திரத்தில் உள்ளடக்கும் வகையில் இலக்கண விளக்கம் கொடுத்து வரலாற்றை முடம் ஆக்கிவிடுகிறது. தெ.பொ.மீ இதை இன்னொரு வகையில் உரைகள் வரலாற்று இலக்கணங்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

....`the commentaries become so many historical grammars reviewing the whole march of the language

from epoch to epoch' என்பது அவருடைய வாசகம் (1961 :115). எனவே உரைகள் தனித்துப் படிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்துவார். அதனாலேயே. தொல்காப்பிய நச்சினார்க்கினியரின் எழுத்ததிகார உரை நச்சினார்க்கினியரின் எழுத்தியல் கோட்பாடு என்ற தலைப்பில் அவருடைய மேற்பார்வையில் ஆராயப்பட்டுள்ளது (சண்முகம் 1967).

ஆராய்ச்சியாளர்கள் மேற்கோள் காட்டப்பட்ட நூலின் கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அந்த நூலை எடுத்துப் படித்து அந்தக் கருத்தின் வன்மை மென்மைகளை உணர்ந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் சுயமாகச் சில கருத்துக்களைக் கூறமுடியும் என்று வகுப்பறையிலும் ஆய்வாளர்களிடையும் அடிக்கடி கூறுவார். Go to the primary source - மூல நூலைப் பார் என்பது அவர் அடிக்கடி கூறும் வாசகம். அப்படிச் செய்யாததால் இன்றும் தமிழ் ஆய்வில் சில குறைகளைப் பார்க்க முடிகிறது. உதாரணமாக, இடைக்காலத்தில் தோன்றிய களவியல் என்ற இலக்கண நூலின் ஆசிரியர் இறையனார் என்று இன்று பலரும் எழுதி. அதை ஒட்டி வரலாறும் விளக்கமும் கற்பித்துவருகிறார்கள். ஆனால் 11ம் நூற்றாண்டை ஒட்டியே இறையனார் களவியல் என்று உரையாசிரியர்களால் அது குறிப்பிடப்படும் வழக்கம் ஏற்பட்டு இன்றும் தொடர்கிறது. ஆனால் களவியல் உரையில் அதன் ஆசிரியர் ஆலவாயில் அவிர்சடைக் கடவுள், மதுரை ஆலவாயிற் பெருமான் அடிகள் போன்ற தொடர்களால் குறிப்பிடப்பட்டுள்ளார். மூல நூலை - உரையைக் கவனமாகப் பார்த்திருந்தால் அது ஒரு தொன்மம் என்பதும், ஆசிரியர் பெயர் மறைந்துவிட்டது அல்லது மறைக்கப்பட்டுவிட்டது என்பதும் எளிதாகப் புரியும் (முழுவிவரத்திற்கு சண்முகம் 1994 பக்52.70 பார்க்கவும்)

என்னுடைய முனைவர் பட்ட ஆய்வுக்குக் கல்வெட்டு மொழியை மொழியியல் நோக்கில் ஆராய்வது என்று தீர்மானித்தவுடன் மத்திய அரசின் கல்வெட்டுத்துறைக்குச் சென்று கல்வெட்டுக்களைப் படிக்கும் முறை, பதிவெடுக்கும் முறை, கல்வெட்டுக்களைப் பதிப்பிக்கும் முறை ஆகியவைகளை அறிந்துகொள்ள வேண்டும் என்று ஒரு மாத காலப் பயிற்சிக்கு மத்திய அரசின் கல்வெட்டுத்துறை அலுவலகத்திற்கு என்னை அனுப்பி வைத்தார். நான் அந்த அலுவலகம் சென்று அங்கிருந்த தலைமைக் கல்வெட்டியலாளரை முதலில் பார்த்தபோது, கல்வெட்டுமொழியின் மொழியியல் ஆய்வுக்கு முன்னரே வெளிவந்துள்ள கல்வெட்டுக்களைப் பயன்படுத்திக்கொண்டால் போதுமே, அதற்கு இங்கு ஏன் வரவேண்டும் என வினவினார். அதற்குப் பேராசிரியர் கருத்துக்களை நான் எடுத்துச் சொல்லியவுடன் அவர் பேராசிரியரின் ஆய்வு அடிப்படை அணுகுமுறை ஆழமானது, புதுமையானது என்று வியந்து பாராட்டினார்.

ஒரு நூலைப் படித்தால் அந்த நூலில் உள்ள துணையன்களில் எடுத்துக் காட்டப்பட்ட சில நூல்களையாவது படிக்கவேண்டும் என்பதையும் ஆய்வாளர்களிடம் அடிக்கடி அவர் வற்புறுத்துவார்.

## 3. இலக்கணக் கொள்கைகள்.

இங்கு இலக்கணம் என்பது எதைக்குறிக்கிறது? இலக்கணக் கொள்கைகள் என்பவை என்ன? என்பவை விளக்கத்துக்கு உரியவை.

தமிழில் இலக்கணம் என்பது மொழி அமைப்பை விளக்கும் எழுத்து, சொல் என்று இரண்டு வகையோடு இலக்கியத்தை விளக்கும் பொருள் (பாடு பொருள்), யாப்பு, அணி, இலக்கிய வகை (பட்டியல்) போன்றவைகளையும்

குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. தெ. பொ. மீ பொருள் பற்றிய சில தலைசிறந்த கட்டுரைகளை எழுதியிருந்தாலும் (1961, முதல் பகுதி), எழுத்து சொல் பற்றி மிகுதியும், தான் ஆய்வு செய்ததோடு அவைகளுக்கு ஆய்வு வழிகாட்டியாகவும் விளங்கியுள்ளார். எனவே மொழி அமைப்பு இலக்கண ஆய்வுகளே தரவுகளாக இங்குக் கொள்ளப் படுகின்றன.

அடுத்து இலக்கணக் கொள்கைகள் என்பவை வெறும் மொழியியல் கோட்பாடுகளை மட்டும் குறிக்கவில்லை என்பதைத் தெ.பொ.மீயின் எழுத்துக்கள் புலப்படுத்துகின்றன. இலக்கண நூல்கள் பற்றிய கொள்கைகள், இலக்கண மொழியியல் கோட்பாடு, இலக்கண உருவாக்கம் பற்றிய கொள்கைகள் ஆகியவைகளும் அதில் புதைந்துள்ளன.

## 3-1. நூல் பற்றிய கொள்கை

தமிழ் வரலாற்றில் தொல்காப்பியம் முக்கிய இடத்தைப் பெறுவதால் தொல்காப்பிய நூலில் கொள்கை பற்றிய பிரச்சினை மட்டுமே விளக்கப்படுகிறது. தொல்காப்பியத்தை வரலாற்று நோக்கில் ஆராயும் பலரும் தொல்காப்பிய நூல் மூல பாடம் பற்றிச் சந்தேகப்பட்டுள்ளார்கள். அதற்குக் காரணம் தொல்காப்பியத்துக்குள் காணப்படும் சில விடுபாடு (இளம்பூரணர்), இடைப்பிறழ்ச்சி (தெய்வச்சிலையார்), பிற்காலத்ததாகக் கருதத்தகுந்த கருத்துக்கள் - அதாவது இடைச்செருகல்கள் (சோமசுந்தர பாரதியார்), முரண்கள் ஆகியவைகளே. மேலும் தொல்காப்பியத்தின் காலம் - குறிப்பாக அதற்கு முன்னும் பின்னும் உள்ள நூல்கள் - உறவுநிலைக் காலம் Relative Chronology பற்றியும் பிரச்சனை உள்ளது

### 3-1-1. மூல பாடம்

பிற்காலக் கருத்துக்கள் தொல்காப்பியத்தில்

இருப்பதாகக் கூறி அவை இடைச் செருகல் என்ற கருத்து நாற்பதுகளிலும், தொல்காப்பியத்தின் எழுத்தும் சொல்லும் ஒருவராலும் பொருளதிகாரம் வேறொருவராலும் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்து அறுபதுகளிலும் முன்மொழியப்பட்டன. (விவரம் சண்முகம் 1989, 134-45 பார்க்கவும்).

தொல்காப்பியத்தில் இடைச்செருகல் உள்ளது என்ற கருத்து தெ.பொ.மீக்கும் உடன்பாடு உண்டு. (1965:52). எழுபதுகளில் (1974அ) அவர் அதைக் கண்டுபிடிப்பதற்கு இரண்டு வழிகளைக் கருதுகோள்களை முன்வைத்துத் தொல்காப்பிய ஆய்வுக்கு ஒரு புதிய திட்டத்தையும் முன்மொழிந்துள்ளார். 1. அ. தொல்காப்பியத்தில் முன்னுக்குப் பின் முரண் உள்ளன. இதை அகநிலை ஆதாரம் எனலாம். உதாரணம் 1. பண்புத்தொகை, வினைத்தொகை முதலானவை களைத் தொல்காப்பியர் 'மருவின் பாத்திய' என்றும் அவை 'புணரியல் நிலையிடை உணரத் தோன்றா' என்றும் (482) கூறியவர் தொண்ணூறு (445), தொள்ளாயிரம் (463) ஆகிய சொற்களுக்குப் புணர்ச்சி இலக்கணம் கூறியது (ப.23, 30) அப்படியே யாவர் என்பது யார் என்று மாறுவதும், யாது என்ற சொல் யாவது என்று மாறுவதும் மருவின் பாத்தியின் திரியும் என்று கூறுவதும், புணரியலின் புறனடைச் சூத்திரத்துக்குப் பின் அமைந்திருப்பதும் (172) இடைச்செருகல் என்ற சந்தேகத்தை உண்டாக்குகின்றன. இடையியலில் ஏகாரத்தை எண்ணுப் பொருளில் வரும் என்று கூறியவர் (742), தொகைமரபில் அளவுப் பெயர்கள், நிறுத்தல் பெயர்கள், எண்ணுப்பெயர்கள் ஆகியவைகளில் தமக்குக் கீழ் அளவை வரும்போது ஏகாரச் சாரியை வரும் என்று கூறுவதும் (164) பிற்காலத்தவை (ப.27). இவை இடைச்செருகலை அறிவியல் ரீதியாகக் காண்பதற்குப் பயன்படும் ஒரு புதிய கருதுகோள். இங்கு இரண்டு கேள்விகள் எழுகின்றன 1. எல்லா உள்நிலை முரண்களையும்

இடைச்செருகல்களாகக் கருதமுடியுமா என்பது? 2. ஒரு நோக்கில் முரணாக இருப்பது இன்னொரு நோக்கில் முரணாகக் கொள்ள முடியாமல் போவது. முதல் வகைக்கு, உதாரணமாக அ.தொல்காப்பியர் முறைப் பெயர்ச் சொற்களைப் பெயரியலில் விரவுத்திணைப் பெயர்களாகக் குறிப்பிட்டு உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை என்ற வரிசையில் விளக்கிவிட்டு, விளிமரபில் பெயர்களை விவரித்தது ஒரு முரணே. அதனால் விளி மரபுச் சூத்திரங்களை இடைச்செருகலாகக் கருதமுடியாது. காரணம் விளி என்பது பேச்சைக்குறிப்பதால் முறைப்பெயர்களை விளித்துப் பேசுவது உயர்திணைப் பொருள்கள் என்ற முறையில் அவை இடம் மாற்றப்பட்டு வருணிக்கப்பட்டுள்ளன என்று வாதிடலாம். ஆ தொல்காப்பியர் வியங்கோள் முன்னிலையிலும், தன்மையிலும் வராது என்று இலக்கணம் கூறியிருந்தாலும் (711) அவரே அந்த இரண்டு இடங்களிலும் கையாண்டுள்ளதையும் அது மூன்று அதிகாரத்திலும் வந்துள்ளதையும் பாலசுப்பிரமணியன் (1983) எடுத்துக் காட்டியுள்ளார்.

தன்மை : இன்னது பிழைப்பின் இதுவாகியர்
துன்னருஞ்சிறப்பின் வஞ்சினத்தானும் (பொருள்) 1025.8

முன்னிலை: செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் (சொல்) 496
செல்லாக் காலை செல்கென விடுத்தலும் (பொருள்) 1093.17

இவைகளை இடைச்செருகலாகக் கருதமுடியுமா?

ஏகாரச் சாரியையைப் பொறுத்தவரையில் (164) அரை என்ற சொல் முன் ஏகாரச் சாரியை வராது என்று அவரே அடுத்த சூத்திரத்திலேயே கூறியுள்ளார். அதாவது இரண்டரை, பத்தரை போன்றவை அவை எண்ணுப் பொருளில் அல்லது உம்மைப் பொருளில் வந்தாலும் அதற்கு விகுதி எதுவும் இல்லை.

எனவே பத்தே கால், பத்தே முக்கால் ஆகியவைகளில் விகுதி இருந்தாலும் பொருள் இல்லை என்று கொண்டு சாரியை என்று வருணித்திருக்கலாம். அப்படியானால் முரண் ஆகாது இது அவருடைய இலக்கண வருணனைக் கோட்பாட்டை ஒட்டியது. அதனால் ஏகாரச் சாரியை சூத்திரத்தை இடைச் செருகல் என்று கருதமுடியாது.

2. பிற்கால இலக்கிய வழக்குகளுக்குத் தொல்காப்பியத்தில் இலக்கணம் உள்ளன. உதாரணம் 1. ஆற்றுப் படைக்கு உரிய இலக்கணம். (1974அ-4) 2. மூவிடப்பெயர்கள் வேற்றுமை ஏற்கும்போது வரும் என், நின், தம் போன்றவை எனது, நினது, தமது, தமக்கு என்று ஆறாம் வேற்றுமையிலும், நான்காம் வேற்றுமையிலும் நிலைமொழி மெய் இரட்டிக்காமல் இருக்கும்போது என்னை, நின்னை, தம்மை என்று இரண்டாம் வேற்றுமையில் நிலைமொழி மெய் இரட்டித்து வருவது முற்கால இடைச்செருகலாகக் கருதுகிறாரா என்பது புரியவில்லை.

சூத்திரம் 160இல் குறியதன் முன்னர் தன்னுரு இரட்டலும் (160.2) என்று தொல்காப்பியரே விதி செய்துள்ளார். எனவே இதை இடைச்செருகலாகக் கொள்ளமுடியாது. ஒரு மொழியின் ஒரு காலகட்ட மொழியை எடுத்துக்கொண்டால் அதற்கு முன்னுள்ள பல கால கட்டத்தின் மொழிநிலையின் பிரதிபலிப்பைக் காணமுடியும். அதனால் மிகப் பழையநிலையைக் காட்டும் மொழிக்கூறுகளை எல்லாம் இடைச்செருகல் என்று கூறமுடியாது.

மொழி அமைப்பு நிலையிலும் வரலாற்று மாற்றம் என்று கருதத் தகுந்தது தொல்காப்பியத்தில் வந்துள்ளதோடு அதற்கு இலக்கணமும் அவர் கூறியுள்ளார். இல் என்ற எதிர்மறை குறிப்பு வினைச் சொல் சங்க இலக்கியத்தில் பெயரெச்சமாகக் கையாளப்பட்டுள்ளது.

கையில் ஊமன் - குறுந்.58.4

நோயில் மாந்தர் பதிற். 21.31

பதிற்றுப் பத்து. குறுந்தொகை, பத்துப்பாட்டு, ஆகியவைகளில் இல் மட்டுமே உள்ளது. இதுவே பெரும் பான்மை. அது பிற்காலத்தில் ஒப்புமையாக்கத்தால் (செய் செய்யா என்பது போல) இல்லா என்று மாறிவிட்டது. சங்க இலக்கியத்தில் சிறுபான்மையாக இல்லா என்பதும் பெயரெச்சமாகக் காணப்படுகிறது.

நின்னல திில்லா அவள் சிறு நுதல் - ஐங். 179.4

கரவில்லாக்கவின் வண்கை -புறம் 377.6 முதலியவை

குறள், சிலம்பு, மணிமேகலை ஆகியவைகளில் கூட இல்லா என்பது சிறுபான்மையாக உள்ளது. அந்த வழக்குத் தொல்காப்பியத்தில் மூன்று அதிகாரத்திலும் உள்ளது.

புள்ளியல்லா எல்லா உயிரும் - தொல் 17 (எழுத்து)

இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர் - 501.1 (சொல்)

பெறுதகை இல்லாப் பிழைப்பு 1096.17 (பொருள்)

உறுதகை அல்லாப் புலவி .16

இதற்கு எழுத்ததிகாரத்தில்

இல்லென் கிளவி இன்மை செப்பின்
வல்லெழுத்து மிகுதலும் ஐயிடை வருதலும்
இயற்கை ஆதலும் ஆகாரம் வருதலும்
கொளத்தகு மரபின் ஆகிடன் உடைத்தே (372)

என்று சூத்திரமும் செய்துள்ளார். இந்த அடிப்படையில் தொல்காப்பிய வழக்குகளையும் சூத்திரத்தையும் இடைச்செருகல் என்று சொல்ல முடியுமா?

இங்குத் தொல்காப்பிய மூல பாடம் பற்றி ஒரு முக்கிய செய்தி கவனத்தில் கொள்ளவேண்டும். அதாவது இளம்பூரணர் 11ம் நூற்றாண்டில் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியதால் அவருக்குப் பிறகு இடைச்செருகல் எழ வாய்ப்பு இல்லை. பாடபேதம், ஒன்றாக்கல், பலவாக்கல், பாடப்படைப்பு, பாடவிளக்கம் போன்றவைகளில் மட்டுமே மூலபாடப் பிரச்சினை எழுந்தன. இருந்தும் ஆங்காங்கே, ஒருசிலர் இடைச்செருகுவதற்கு முயன்று வந்தாலும், அது வெற்றி பெறவில்லை. அது தொல்காப்பியமாக ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. எனவே இளம்பூரணர் காலத்துக்கு முன்னரே இடைச்செருகல் நடைபெற்றிருக்கவேண்டும். அந்த நிலையில் தெபொமீ இடைச்செருகலை யார் செய்தது என்று இனம் காண முயற்சித்துள்ளார்.

இடைக்காலத்தில் உரையாசிரியரும் பிறரும் பதிவு செய்த கதைகள் அடிப்படையில் இடைச்செருகலைச் செய்தது அகத்தியர் மாணவராகக் கருதப்படும் தொல்காப்பியர் என்றும் கூறியுள்ளார். அகத்தியர் இடைப்பட்ட பல்லவர் காலத்தவராக இருந்திருக்கலாம் என்றும் ப.1ல் குறிப்பிட்டுள்ளார்.

One has to assume therefore that there was an earlier Tolkappiyar and a later Tolkappiyar that the latter Tolkappiyar alone was the disciple of Akattiyar writing the first chapter of Pannirupatalam...

Evidently Tolkappiyam of the Older age is different from the Tolkappiyar of the later age not only with reference to the theory of puram poetry but also with reference to other aspects of grammer and poetics. An author coming later, naturally takes note of the developments in literary and colloquial usages. But when both the authors are identified as one, the readers are

naturally perplexed to find inconsistencies in the work which is really a combination of rather confusion of the works of the earlier and later authors'. (1974 அ.3).

(முற்காலத் தொல்காப்பியர், பிற்காலத்தொல்காப்பியர் என்று இருவர் இருந்ததாக ஊகிக்க வேண்டியுள்ளது. பின்னவரே அகத்தியரின் மாணவர்: பன்னிருபடலத்தின் முதல் அதிகாரத்தை எழுதியர்... முற்காலத் தொல்காப்பியம் பிற்காலத் தொல்காப்பியத்திலிருந்து புறத்திணை இலக்கணத்தில் மட்டும் அல்லாமல், இலக்கணத்தில் பிற பகுதியிலும் செய்யுளியலிலும் மாறுபடுகிறது. பிற்காலத்தில் வந்த ஒரு ஆசிரியருக்கு இலக்கியத்திலும் பேச்சு மொழியிலும் நடந்த மாற்றங்கள் தெரியும் . இரண்டு ஆசிரியர்களையும் ஒருவராகக் கொள்ளும்போதுதான் நூலில் முரண்புலப்பட்டு, வாசகருக்குக் குழப்பம் ஏற்படுகிறது).

அதற்கு ஆதாரமாகத் தமிழில் பல ஆசிரியர்கள் (உதாரணம் நக்கீரர், கல்லாடர்) ஒரு சிறப்புப் பெயரைப் பெற்றிருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். இதன் உள்கிடை என்ன?

தொல்காப்பியத்தில் இடைச்செருகலை ஒத்துக் கொண்டு அது பிற்காலத் தொல்காப்பியரால் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று சொல்வது இடைக்காலத்தில் தமிழ் உலகில் வழங்கிய கதைகளுக்கு ஒரு வரலாற்று அங்கீகாரம் கொடுப்பதாகவும் இடைச்செருகலுக்கும் ஒரு வரலாறு கற்பிப்பதாகவும் அமைந்துள்ளது. இது ஒரு ஊகமே. ஏனென்றால் . இன்று அகத்தியர் கதையும், தொல்காப்பியர் பற்றிய புனைவும் இடைக்கால அறிஞர் சமூகத்தின் மொழி உணர்வின் வெளிப்பாடு. அவை மொழித்தொன்மங்கள் என்று புரிதல் இன்று ஏற்பட்டுள்ளது எப்படியானாலும் .

பழைய தொல்காப்பியத்தையும் புதிய தொல்காப்பியத்தையும் பிரித்தறியும் முயற்சியில் தொல்காப்பிய ஆய்வு நடத்தப்படவேண்டும் என்றும் அது ஒரு புதிய நோக்கு என்றும் அது எதிர்காலத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

...the whole of Tolkappiyam has to be studied with a view to find out the older work as distinguished from the later work. It is a new point of view which has to be pursued in the future' (p.4).

என்றும் குறிப்பிட்டுள்ளது இடைச்செருகல் பற்றிய ஆய்வு தொடரவேண்டும் என்றும் மூல பாட ஆய்வு முக்கியம் என்பதையும் அவர் உணர்த்துவதாகக் கொள்ளலாம். ஏனென்றால் இடைச்செருகல் முற்காலத்தில் தொல்காப்பியம் தொடர்ந்து படிக்கப்பட்டு வந்ததையும் இடைக்கால அறிஞர்களின் தொல்காப்பியம் பற்றிய மதிப்பீடு. இலக்கணம் பற்றிய உணர்வு ஆகியவைகளையும் புலப்படுத்தவதாகக் கொண்டே அவர் இது புதிய அணுகுமுறை என்று கருதியிருக்க வேண்டும். இடைக்காலத்தில் தொல்காப்பியத்தில் சில செய்திகள் விடுபட்டுள்ளன என்றும் தொல்காப்பியம் எல்லாக் காலத்துக்கும் உரிய இலக்கணம் என்றால் தங்கள் காலத்தில் நடந்த மாற்றங்களையும் வர்ணிக்கும் சூத்திரங்கள் இடம் பெறவேண்டும் என்று கருதி இடைச்செருகலைச் செய்திருக்கவேண்டும் என்றும் இடைச்செருகலுக்கு ஒரு விளக்கமும் பெறப்படுகிறது.

தொல்காப்பிய மூலபாடம் பற்றிப் பின்னால் வந்த ஆய்வாளர்கள் (உதாரணம், கந்தசாமி, பாலசுப்பிரமணியன்) தொல்காப்பிய மூன்று அதிகாரங்களும் ஒரு ஆசிரியரால் எழுதப் பட்டிருக்கவேண்டும் என்று நிறுவுவதில்தான் கவனம் செலுத்தி யுள்ளார்கள். (விவரம், சண்முகம், 1989: 145-57) அதாவது இரண்டு தொல்காப்பியர் என்ற கருத்து பிற்காலத் தொல்காப்பிய ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

தொல்காப்பியத்தில் இடைச்சொல் பிரச்சனை இதுவரை தீரவும் இல்லை, ஒரு நாளும் தீரப்போவதுமில்லை. இருந்தாலும் இடைச்செருகல் பற்றிய கோட்பாடு நிலை விளக்கமும், முரணாகவும் பிற்காலத்தேவையாகவும் கருதுபவைகளை இனம் கண்டு அவைகளைத் தீவிர ஆய்வுக்கு உள்படுத்துவதும் மிக மிக அவசியமே. அவையே தொல்காப்பிய வாசிப்புக்கும், புரிதலுக்கும் உதவி செய்யும்.

அவரே குறிப்பட்டுள்ளபடி இடைச்செருகலோ முரணோ தமிழ்க் கல்வியில் தொல்காப்பியத்தின் முக்கியத்துவத் தைக் குறைக்காது.

"It may be there are interpolations of a later age here and there. In this work, but in the main it represents the ancient Tamilians culture capable of being deciphered by the modern mind" (1961: 32).

(நூலில் இடைச்செருகல்கள் ஆங்காங்கே இருந்தாலும் முக்கியப் பகுதி பண்டைத் தமிழர்களின் பண்பாட்டுப் பிரதிநிதியாய் தற்காலத்தில் புரிந்துக்கொள்ளக்கூடிய தாய் அமைந்துள்ளது.) என்பதே உண்மை. தொல்காப்பியம் பழந்தமிழர் அறிவுச் சாதனையின் கொடுமுடி, தமிழின் முதல் அறிவியல் நூல்.

### 3.1.2. காலம்

களவியல் உரை, தொல்காப்பியம் இடைச்சங்க, கடைச்சங்க இலக்கணம் என்றும் இன்று நமக்குக் கிடைத்திருக்கும் தொகையும் பாட்டும் மூன்றாம் சங்கத்துக்கு உரியது என்றும் கூறி ஒரு உள்வரலாறு கற்பித்தது. உரையாசிரியர்களும் ஆங்காங்கே சில மாறுபாடுகளை எடுத்துக்காட்டிச் சென்றுள்ளார்கள். இந்த நூற்றாண்டில், இலக்கியவரலாற்று ஆசிரியர்கள் தொல்காப்பிய விதிகளுக்கும்

சங்க இலக்கிய மொழிகளுக்கும் உள்ள மாறுபாடுகளை - அதாவது அவருடைய இலக்கண விதிகள் புறக்கணிக்கப் பட்டதால் ஏற்பட்ட மாறுபாடுகளை வரலாற்று மாற்றமாகக் கொண்டு தொல்காப்பியம் சங்க இலக்கியத்துக்கு முந்தியது என்பது உறுதிபடுவதாகக் கொண்டதோடு தொல்காப்பியத்தின் கால மேல் எல்லையை அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப அமைத்துக்கொண்டு விட்டார்கள்.

தெ.பொ.மீ. ஒரு மொழி வரலாற்று அறிஞர் என்ற முறையில் தொல்காப்பியத்தில் உள்ள அகச்சான்றுகளைப் புறச்சான்றுகளோடு இணைத்து உள்நிலை வரலாற்று முறையில் ஒரு முடிவுக்கு வந்துள்ளார். அகச்சான்றுகளாக, தொல்காப்பியத்தில் தமிழின் வரிவடிவ அமைப்பு முறை பற்றி நேரடியாகச் சில சூத்திரங்களும் (15,7, 104-5), நெடுங்கணக்கு வைப்பு முறை பற்றிக் குறிப்பாகச் சில சூத்திரங்களும் (1,18-19 பிறப்பியல் சூத்திரங்கள்) உள்ளன. புறச்சான்றாக, இன்று வரை நடந்த ஆய்வால் தமிழ் பிராமி கல்வெட்டுகளே மிகப் பழைய சாற்று ஆதாரங்கள் என்பது அறியமுடிகிறது. அவைகளை விரிவாக ஆராய்ந்து (1974அ 282-4 உள்ளது) தொல்காப்பியம் தமிழ் பிராமி கல்வெட்டுகளுக்குப் பின்னரும் - (அதாவது கிமு. மூன்று அல்லது இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிந்தியது என்று மேலெல்லை வரையறுத்துள்ளார்) சங்க இலக்கியத்துக்கு முன்னரும் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று தமிழ் மொழி வரலாற்றில் (1965) வரையறுத்துள்ளார்

`Many of Tolkappiyar's rules, as pointed out by his commentators have lost their force by the time of Cankam literature now extant, and it is, therefore, assumed to be a book anterior in time to the latter, giving one a picture of the Tamil country of the few centuries before the Cankam Poems' (196155) என்று தெபொமீ கூறி இதற்கு

ஆதரவாகக் களவியல்உரை மரபையும் சுட்டிக்காட்டினாலும் அதில் முழு நம்பிக்கை இல்லை என்பது அதே பத்தியில் இதை அடுத்த இரண்டாவது வாக்கியமாக உள்ள கீழ்க்கண்ட வாசகம் உணர்த்துகிறது.

But, it is curious to find the same anthological character of literature emphasised by Tolkappiyar himself. The theory of poetics, adumbrated in his work, implies the very kind of anthology, based on something like the cankam tradition. (அதாவது தொல்காப்பியத்தில் இலக்கியத் தொகை நூல்கள் பற்றிய குறிப்பு காணப்படுவது வியப்பாக உள்ளது. அவருடைய இலக்கியக் கோட்பாடு சங்க இலக்கியத் தொகையை ஒட்டியது என்பது சூசகமாக உணர்த்துகிறது). இதற்கு முக்கிய காரணம் அவருடைய திராவிட மொழி ஒப்பிலக்கண அறிவு.

இன்றைய இலக்கண ஆய்வில் ஒப்பிலக்கண நோக்கு, இலக்கண உருவாக்க நோக்கு, இலக்கிய மொழி நோக்கு முதலிய அணுகுமுறைகளால் தொல்காப்பிய மொழியிலிருந்து சங்கத் தமிழ் மாறுபடும் மொழியமைப்புத் தரவுகள் மறுபரிசீலனைக்கு உள்படுத்தப்பட்டுப் புதிய எண்ணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன (சண்முகம். 1989 166 தொ.) உதாரணமாக, தொல்காப்பியர் சொல்லுக்கு முதலில் வராது என்ற சகர எழுத்து சங்க இலக்கியத்தில் 61 சொற்களில் வந்துள்ளது. அவைகளில் சரக்கு, சக்கை, சம்மட்டி, சங்கு, சந்து ஆகியவை பிற திராவிடமொழிகளிலும் காணப்படுவதால் திராவிட மொழிகளுக்கும் - எனவே பழந்தமிழுக்கும் உரிய பழைய சொற்கள். அந்த நிலையில் இவை வரலாற்று மாற்றத்தால் தோன்றிய சொற்களாகக் கருதமுடியாதவை அப்படியானால்

இவைகளைத் தொல்காப்பியர் ஏன் புறக்கணித்தார் என்ற கேள்வி எழுகிறது. அது ஒரு இலக்கண உருவாக்கக் கோட்பாட்டை நோக்கியும், இலக்கிய மொழிக் கோட்பாட்டு நோக்கையும் புலப்படுத்துகிறது. அதாவது அந்தச் சொற்கள் தகுவழக்குச் சொற்களாக - இயற்சொற்களாகக் கருதாமல் திசைச் சொற்களைக் கொள்கை அளவில் அங்கீகரித்து, வேறு வகையில் (ஒலி உறழ்ச்சி, ஒலியன் உறழ்ச்சி, உருபன் உறழ்ச்சி, தொடர் உறழ்ச்சி ஆகியவைகளை) சில திசைச் சொற்களைப் புறக்கணித்து இயற்சொற்களாகக் கருதப்பட்டவைகளுக்கே இலக்கணம் எழுதியுள்ளார். இந்த வேறுபாடு தொல்காப்பியரின் இலக்கண உருவாக்கக் கோட்பாட்டில் தரவுத்தேர்வு என்ற ஒரு பரிமாணத்தைப் புலப்படுத்துகிறது. இங்கு சங்க இலக்கிய மொழி, வரலாற்று நோக்கில் பழமையானது. அதே சமயத்தில் தொல்காப்பியர் சொல்லுக்கு வந்துள்ளது பிறமொழிச் சொற்களாக இருப்பதால் இங்குத் தொல்காப்பிய மொழி பழமையானது. எனவே இந்த இரண்டு நிலையும் பரிசீலிக்க வேறு சில முக்கியமான கேள்விகள் இலக்கண உருவாக்க நோக்கில் எழுப்பப்பட்டுள்ளன. 1.தொல்காப்பிய இலக்கணத்துக்கு அடிப்படையான இலக்கியம் எவை? 2. முன்னால் எழுந்த தொல்காப்பியம் பின்னால் வந்த சங்க இலக்கியத்தின் இலக்கியக் கோட்பாடுகளைப் பெரும்பான்மையும் எப்படி பிரதிபலிக்கமுடியும்? 3.தொல்காப்பியர் சங்க இலக்கியத்துக்குப் பின் தோன்றிய குறள், பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகியவைகளின் யாப்புக்கு (வெண்பா) எப்படி இலக்கணம் எழுதினார்? என்பவை அவை.

*(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்...)*

# உன்னத உடல் நலம் தரும்
# உயர்வான வாழ்வு தரும்

## உடல் நலப் பரிசோதனைத் திட்டங்கள்

- எக்ஸிகியூட்டிவ் முழு உடல் நலப் பரிசோதனை
- முழு உடல் நலப் பரிசோதனை
- முதியவர்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- குழந்தைகளுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- திருமணத்திற்கு முன் பரிசோதனை
- முழு இருதய பரிசோதனை
- முழு நீரிழிவுப் பரிசோதனை
- புற்றுநோய்ப் பரிசோதனை
- மதுப்பழக்கமுள்ள நோயாளிகளுக்கான முழுப் பரிசோதனை
- ஆண்களுக்கான பாலியல் குறைபாடுகள் குறித்த சோதனை
- வெளிநாடு செல்லும் பயணிகளுக்கான பரிசோதனை
- பொது உடல் நலப் பரிசோதனை
- வேலைக்குத் தகுதி பெற மருத்துவப் பரிசோதனை

காலை 8.00 மணி முதல் 9.00 மணிக்குள்
நீங்கள் விரும்பிய நாளில் (ஞாயிறு உட்பட)
வெறும் வயிற்றில் மல சாம்பிளோடு நேரில் வரவும்.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மருத்துவமனைக்
கட்டணத்தில் 20 சதவீதம் சலுகை வழங்கப்படும்

உங்கள் நோய் பற்றிய பிரச்சனைகளுக்குத் தொலைபேசியின் மூலம் இலவச ஆலோசனை வழங்கப்படும். திங்கள் முதல் வெள்ளி வரை நேரம் மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை

## மாஸ்டர் ஹெல்த் செக்-அப் டிபார்ட்மெண்ட்

# மீனாட்சி மிஷன் மருத்துவமனை
# மற்றும் ஆராய்ச்சி மையம்

லேக் ஏரியா, மேலூர் ரோடு, மதுரை–625 107. போன் : 588741–56
Fax : 586353 E-mail : mmhrc@md2.vsnl.net.in

அன்பு அச்சகம், மதுரை – 1. ✆ 741116